# ப்ரேமபக்தியால் வந்த மஹாகலகம்

அன்பர்களே!
ஸ்ரீரங்க உல்லாசக் கட்டுரைகளில் பங்குனி உத்திரத்தின் சிறப்புகளையும்,அவ்வுற்சவத்தில் உணர்த்தப்படும் மிக உயர்ந்த ஆன்மீகப்பாடத்தினையும் படித்திர்ப்பீர்கள்.இந்த உறையூர் நாச்சியார்--நம்பெருமாள் சேர்த்தி எப்படி உண்டாகி இருக்கும் என்று எதார்த்த ரீதியில் ஒரு சிந்தனைவெளிப்பாடாக இக்கட்டுரைப் பகுதி அமைகின்றது.

ஸ்ரீரங்கன் காவிரிக்கரையில் கோயில் கண்டுவிட்டார்.அன்றாட வழிபாடுகளும் விழாக்களும் இனிதே நடைபெறுகின்றன.இ'ந்த நிலையில் சோழன் தர்மவர்மாவின் இனிய அன்பு மகள்-கமலவல்லி ப்ரேமபக்தியால் ரங்கனிடம் தன்னையே அர்ப்பணித்து வாழ்கிறாள்.தன்னை அவனது தாசானுதாசியாய் சரண் புகுகிறாள்.அவளுடைய மேன்மையான பக்தியை மன்னனும் அறிகிறான்.பல்வேறு சமூகச் சுஇக்கல்களை,எதார்த்த வாழ்க்கைமுறையினையும் அவளுக்கு எடுத்துச் சொல்லிப் பார்க்கிறான்.ஆனால் அவள் தன் மனம் சதா நம்பெருமாளிடமே உள்ளதைப் புரியவைக்கிறாள்.

இந்த நிலையில் மன்னனும் நம்பெருமாளை ஸ்ரீரங்கத்தில் இருந்து சில காலம் தன் உறையூர் அரண்மனைக்கு எழச்செய்திருக்க வேண்டும்.அப்படிச் செய்தால்,சில காலம் பூசை--புணஸ்காரம் என்று தன் மகள் கழித்து ஏக்கத்தினையும் ஆற்றாமையையும் போக்கியபின் எதார்த்த வாழ்விற்கு மீளலாம் என்று எண்ணியிருப்பான் .

தன் அரசாதிகாரத்தினால் நம்பெருமாளை அரண்மனைக்குக் கொண்டு வந்திருக்கக் கூடும்.கமலவல்லியும் தன் ஆசைதீர தன் ப்ரேம பக்தியைப் பலவாறு நம்பெருமாளுக்கு வெளிப்படுத்தி இருப்பாள்.ஆனால் காலம் போகப்போக அவளது ப்ரேம பக்தி அதிகரித்திருக்குமே ஒழிய வடிந்திருக்காது.

இந்நிலையில் மீண்டும் அடுத்த பங்குனிப்பெரு விழா வருகையில் அவளை ஒருவாறு தேற்றி,மன்னன் நம்பெருமாளை ஸ்ரீரங்கத்திற்கு அனுப்பியிருக்க வேண்டும்.

ஆனால் ஸ்ரீரங்கநாயகித்தாயார் கோயில் அர்ச்சகர்கள் நம்பெருமாளின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இருக்கக்கூடும்.

**காரணங்கள்:**

*பெண்கள் அன்றைய பக்திமார்க்கதில் அவ்வளவாக ஏற்றுக் கொள்ளப் படாமல் இருந்திருக்கக் கூடும்.

*ஒரு பெண்ணின் அந்தப்புரத்தில் இருந்த பெருமாளை, ஆச்சாரம் கருதி மக்களும் கோயிலாரும் ஏற்க மறுத்திருக்கலாம்.

*அரசனின் தலையீட்டைக் கோயில் விரும்பாமலும் இருக்கலாம்.

இதனால் எழுந்த கலகம் மிகவும் முக்கியம் வாய்ந்தது.ஒன்று இறைவனைப் பிரிந்த கமலவல்லி ப்ரேமம் மிகுந்து உயிரைவிட்டு பெருமாளுடன் ஐக்கியம் ஆகியிருக்க வேண்டும்.அல்லது, அவள் ஸ்ரீரங்கம் கோயிலில் தாசியாய்த் தன்னைப் பெருமாளுக்கே அர்ப்பணித்திருக்க வேண்டும்.ஆனால் கோயிலில் இவ்விஷயம் மிகவும் கலகத்தினை ஏற்படுத்தி உள்ளது.

சமய நெறிகளையும் மீறக் கூடாது.அதே சமயம் மன்னனிடம் பகைமையும் கூடாது.

கடைசியில் கோயிலும் மன்னனும் ,ஆண்டுக்கு ஒருமுறை பெருமாள் சோழனின் அரண்மனைக்கு எழுந்தருள்வதை ஒரு முடிவாக ஏற்று இருத்தல் வேண்டும்.இன்றும் மைசூர் மலையைவிடுத்து,அன்னை சாமுண்டீஸ்வரி தசராவில் மைசூர்மஹாராஜாவின் அரண்மனைக்கு எழுந்தருளு அல்லவா உற்சவம் காண்கிறாள்?

இவ்வாறு ஏற்பட்ட பங்குனிப் பெருவிழா மாற்றம்,பிற்காலத்தில் ஆச்சாரியர்களால் மிக உயர்ந்த ஆன்மீகப் படம் சொல்லும் ப்ரணயகலக உற்சவமாய் மாற்றபட்டது எனலாம்.

எப்படியோ உறையூர் கமலவல்லித்தாயாரின் ப்ரேமபக்தியால் இன்றை உலகம் உய்ய ஆன்மீகப் பாடம் ஒன்று ஆச்சாரியர்களால் எழுதப்பட்டதல்லவா?

எல்லாமே நம்பெருமாளின் விருப்பமே!!!

சரி,இனி எங்கு சுற்றியும் ரங்கனை சேவிக்கலாமா?

ஓடுங்கள் கோயில் மூடப்போகிறது....அடுத்த கட்டுரைக்கு.....

நன்றி!!!